முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2019 சனவரி

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

(Advanced Financial Accounting)

2019-01-26
முற்பகல்
[8.45 – 12.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசித்து விளங்கிக்கொள்ள : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்புகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண் டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

எட்டு (08) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*வினா இலக்கங்கள்* ***1.1*** *முதல்* ***1.4*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையைத் தெரிவுசெய்து, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதி, அவற்றுக்கு எதிரே நீர் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தினை எழுதுக..*

**1.1** 2018 மார்ச் மாதத்துடன் தொடர்புபட்ட கீழ்வரும் தொகைகள் **வ/ப XYZ (தனி.) கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன:

| | **ரூ.** |
|---|---|
| கழிப்பனவுகளுக்கு முன் மொத்தச் சம்பளம் | 9,600,000 |
| உழைக்கும்போதே செலுத்தும் வரி (PAYE) கழிப்பனவு | 325,000 |

கம்பனி, மொத்தச் சம்பளத்திலிருந்து ஊழியர் சேமலாப நிதியத்திக்கு (EPF) 12 % இனையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% இனையும் பங்களிப்புச் செய்கின்றது. EPFக்கு ஊழியரின் பங்களிப்பு 8%.

மேலுள்ள தகவல்களின் அடிப்படையில், 2018 மார்ச் மாதத்திற்கான கம்பனியின் நிகரச் சம்பளம்:

(1) ரூ. 7,355,000/-. (2) ரூ. 8,507,000/-. (3) ரூ. 9,275,000/-. (4) ரூ. 7,067,000/-.

(02 புள்ளிகள்)

**1.2** நடப்பு ஆண்டின் இறுதித் தொக்கு மிகைப்படுத்திக் கூறப்பட்டிருப்பின், இலாபத்தில் தாக்கத்தினைக் காட்டும் சரியான கூற்று எது?

(1) நடப்பு ஆண்டின் இலாபம் குறைத்தும் அடுத்த ஆண்டின் இலாபம் மிகைப்படுத்தியும் கூறப்படும்.

(2) நடப்பு ஆண்டின் மற்றும் அடுத்த ஆண்டின் இலாபங்களில் மாற்றம் ஏற்படாது.

(3) நடப்பு ஆண்டின் இலாபம் மிகைப்படுத்தியும் அடுத்த ஆண்டின் இலாபம் குறைத்தும் கூறப்படும்.

(4) நடப்பு ஆண்டின் இலாபத்தில் மாற்றம் இருக்காது, அடுத்த ஆண்டின் இலாபம் மிகைப்படுத்திக் கூறப்படும். (02 புள்ளிகள்)

**1.3** கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் நீண்டகால கடன் சாதனங்கள் பற்றியதாகும்:

**(a)** இரண்டு பிரதான கடன் சாதனங்கள், தனிச்சங்களும் சாதாரண பங்குகளும் ஆகும்.

**(b)** அநேகமான சந்தர்ப்பங்களில் கடன் சாதனங்கள் நிலையான வட்டி வீதத்தைக் கொண்டிருக்கும்.

**(c)** பொதுவாக கடன் சாதனங்களுக்கு வாக்குரிமை கிடையாது.

மேற்படி கூற்றுக்களுள் சரியான கூற்றுக்கள்:

(1) **(a)** மற்றும் **(b)** மாத்திரம் (2) **(b)** மற்றும் **(c)** மாத்திரம்

(3) **(a)** மற்றும் **(c)** மாத்திரம் (4) மேற்கூறிய எல்லாம். (02 புள்ளிகள்)

**1.4** **வ/ப எவர் ரிச் (தனி) கம்பனி** பல ஆதனங்களிலிருந்து வாடகை வருமானம் பெறுகின்றது. 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின்போது பெற்ற மொத்த வாடகை ரூ. 481,200/-.

கீழ்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

| விபரம் | 2017 ஏப்ரல் 01 இல் (ரூ.) | 2018 மார்ச் 31 இல் (ரூ.) |
|---|---|---|
| முன்னதாகப் பெறப்பட்ட வாடகை | 28,700 | 31,200 |
| நிலுவையிலுள்ள வாடகை | 21,200 | 18,400 |

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய வாடகை வருமானம் என்ன?

(1) ரூ. 475,900/-. (2) ரூ. 460,900/-. (3) ரூ. 486,500/-. (4) ரூ. 501,500/-.
(02 புள்ளிகள்)

***1.5* தொடக்கம் *1.8* வரையான வினாக்களுக்கான விடைகளை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குவரிசையில் எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.**

**1.5** பரிப்பொன்றினை நடைமுறைப் பரிப்பாக வகைப்படுத்துவதற்கு நிறைவுசெய்யப்பட வேண்டிய இரண்டு (02) தேர்வு நிபந்தனைகளைக் கூறுக. (02 புள்ளிகள்)

**1.6** 2018 மார்ச் 31 இல் தொக்குகளை கணக்கெடுப்புச் செய்த தனி வியாபாரி ஒருவர் அந்தத் தொக்குகளில் ரூ. 2,000,000/- கிரயமானவை வழக்கொழிந்தவையாக இருக்கக் கண்டார். எனினும், மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை விலையில் 15 % மேலதிக விற்பனைப் பணிசை செலுத்தி அவற்றை ரூ. 1,800,000/- க்கு விற்பனை செய்ய முடியும்.

2018 மார்ச் 31 இல் கணக்கேடுகளில் காட்டப்பட வேண்டிய அந்தத் தொக்கின் பெறுமதியை இனங்காண்க. (03 புள்ளிகள்)

**1.7** இருப்பிலுள்ள பங்குடமையை மாற்றியமைப்பதற்குத் தேவைப்படும் மூன்று (03) சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.8** 1890 ஆம் ஆண்டின் பங்குடமை ஒழுங்குச்சட்டத்திற்கு அமைய கீழ்வருவன ஒவ்வொன்றிற்கும் தேவையான ஏற்பாடுகளைக் குறிப்பிடுக:

(a) வியாபாரத்தின் தன்மையில் மாற்றம்

(b) பங்குடமைக்கு புதிய பங்காளர் ஒருவரை அறிமுகம் செய்தல் (04 புள்ளிகள்)

பகுதி *A* முடிவு

## <u>பகுதி B</u>

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

2018 ஆகஸ்ட் 01 இல் **நதுன் டிரேடர்ஸின்** வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ. 585,600/-.

2018 ஆகஸ்ட் மாதத்தின்போது வியாபார கடன்பட்டோர் தொடர்பில் கீழ்வரும் தொகுக்கப்பட்ட தகவல்கள் கம்பனியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன:

| | ரூ. |
|---|---|
| கடன் விற்பனைகள் | 258,000 |
| உட்திரும்பல் | 23,800 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற பணம் | 189,000 |
| அனுமதிக்கப்பட்ட கழிவுகள் | 4,900 |

பின்னர் செவ்வைபார்த்தபோது வியாபாரக் கடன்பட்டோர் பேரேட்டுத் தனித்தனிக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதியிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. இந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் கீழ்வருமாறு:

(1) ஆகஸ்ட் மாதத்திற்கான விற்பனை நாளேட்டுக் கூட்டுத்தொகை ரூ. 20,000/- இனால் அதிகமாகக் கூட்டப்பட்டது.

(2) வியாபாரக் கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து பெற்ற பணம் ரூ. 28,000/- கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டபோதிலும் கடன்பட்டோர் பேரேட்டுத் தனித்தனிக் கணக்கில் பதிவுசெய்யப்படவில்லை.

(3) மூன்று கொள்வனவு விலைப்பட்டியல்கள் தவறுதலாக கடன் விற்பனைகளாக விற்பனை நாளேட்டில் பதியப்பட்டது. இந்த மூன்று விலைப்பட்டியல்களின் மொத்தம் ரூ. 27,000/- ஆனது கடன்பட்டோர் பேரேட்டுத் தனித்தனிக் கணக்குகளிலும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் பதிவுசெய்யப் பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

மேற்படி மூன்று உருப்படிகளுக்கும் செம்மையாக்கம் செய்யப்பட்ட பின்னர் சரியான மீதியைக் காட்டும் வகையில் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் வியாபார கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 03

**கசுன், தசுன், சுபுன்** ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 4 : 3 : 3 என்ற விகிதத்தில் பகிரும் பங்குடமையில் ஈடுபட்டுள்ளனர்.

பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்துள்ளது:

- ஆரம்ப மூலதனக் கணக்கு மீதிகளுக்கு ஆண்டிற்கு 10 % வட்டி செலுத்துவதற்கு
- **தசுன்** ஆண்டிற்கு ரூ. 300,000/- சம்பளம் பெறுவதற்கு உரித்தினைக் கொண்டுள்ளார்.

2018 மார்ச் 31 இல் பங்குடமையின் பரீட்சை மீதியிலிருந்து கீழ்வரும் மீதிகள் பிரித்தறியப்பட்டன:

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்குகள்: | | |
| **கசுன்** | | 4,000,000 |
| **தசுன்** | | 3,000,000 |
| **சுபுன்** | | 3,000,000 |
| எடுப்பனவுகள்: | | |
| **கசுன்** | 1,200,000 | |
| **தசுன்** | 600,000 | |
| **சுபுன்** | 300,000 | |

பங்குடமையின் 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பகிர்வுக்கு முந்திய நிகர இலாபம் ரூ. 2,031,250/-.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் இலாப அல்லது நட்டப் பகிர்வுப் கணக்கினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

**வ/ப வித்தியா (தனி) கம்பனி** 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டில் நிகரச் சம்பளமாக ரூ. 27,000,000/- அதன் ஊழியர்களுக்குச் செலுத்தியது:

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) ஊழியர் சேமலாப நிதிய (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய (ETF) பங்களிப்புகள் மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படும்.

(2) EPF க்கான ஊழியர் பங்களிப்பு மற்றும் கம்பனியின் பங்களிப்பு முறையே 8 % மற்றும் 12 % ஆகும்.

(3) ETF க்கான பங்களிப்பு 3 %.

(4) ஒவ்வொரு ஊழியரிடமிருந்தும் ஊழியர் நலன்புரி நிதியப் பங்களிப்பாக மொத்தச் சம்பளத்தின் 2 % கழிக்கப்படல் வேண்டும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக **வ/ப வித்தியா (தனி) கம்பனியின்** கீழ்வரும் தொகுக்கப்பட்ட சம்பளத்தாளில் மேலே தரப்பட்ட தகவல்களைப் பதிவுசெய்க.

| மொத்தச் சம்பளம் (ரூ.) | நலன்புரி நிதியப் பங்களிப்பு (ரூ.) | EPF கழிப்பனவு (ரூ.) | நிகரச் சம்பளம் (ரூ.) | கம்பனியின் பங்களிப்பு (ரூ.) | |
|---|---|---|---|---|---|
| | | | | EPF | ETF |
| | | | | | |

(05 புள்ளிகள்)

## வினா 05

2018 மே 31 இல் **ஹசித்த டிரேடர்ஸின்** காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) வரவு மீதி (சாதகமான மீதி) ரூ. 328,500/-. 2018 மே மாதத்திற்கான காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு மற்றும் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு ஆகியவற்றின் தொகுப்பு கீழ்வருமாறு:

| காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு | | |
|---|---|---|
| **திகதி** | **பெறுவனவு** | **தொகை (ரூ.)** |
| 2018.05.02 | காசு வைப்பு | 28,000 |
| 2018.05.05 | அஹமட் - காசோலை இல. 343212 | 60,000 |
| 2018.05.12 | பேணாட் (தனி) கம்பனி – காசோலை இல. 451678 | 45,000 |
| 2018.05.18 | அமாலி பிறின்டர்ஸ் - காசோலை இல. 231457 | 30,000 |
| 2018.05.30 | W. நிஹால் - காசோலை இல. 117654 | 35,000 |
| | | **198,000** |

| காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு | | |
|---|---|---|
| **திகதி** | **கொடுப்பனவு** | **தொகை (ரூ.)** |
| 2018.05.02 | மனோகரா – காசோலை இல. 157842 | 50,000 |
| 2018.05.05 | ஹரேந்திரா – காசோலை இல. 157843 | 26,000 |
| 2018.05.08 | P. டொனால்ட் - காசோலை இல. 157844 | 34,000 |
| 2018.05.26 | M. ஹர்ஷ - காசோலை இல. 157845 | 11,000 |
| 2018.05.29 | மனஹரா (தனி) கம்பனி – காசோலை இல. 157846 | 13,500 |
| | | **134,500** |

2018 மே மாதத்திற்கான **ஹசித டிரேடர்ஸின்** வங்கிக் கூற்றின் பிரித்தெடுப்பு கீழ்வருமாறு:

| திகதி | விபரம் | வரவு (ரூ.) | செலவு (ரூ.) | மீதி (ரூ.) |
|---|---|---|---|---|
| 2018.05.01 | மீதி | | | 265,000 |
| 2018.05.03 | காசு வைப்பு | | 28,000 | 293,000 |
| 2018.05.05 | காசோலைக் கொடுப்பனவு - 157842 | 50,000 | | 243,000 |
| 2018.05.08 | காசோலை வைப்பு - 343212 | | 60,000 | 303,000 |
| 2018.05.12 | காசோலைக் கொடுப்பனவு - 157843 | 26,000 | | 277,000 |
| 2018.05.15 | காசோலை வைப்பு - 451678 | | 45,000 | 322,000 |
| 2018.05.18 | காசோலைக் கொடுப்பனவு - 157844 | 34,000 | | 288,000 |
| 2018.05.23 | காசோலை வைப்பு - 231457 | | 30,000 | 318,000 |
| 2018.05.25 | கடன் தவணைக் கட்டணம் | 30,000 | | 288,000 |
| 2018.05.27 | நேரடி வைப்பு - 141567 | | 12,000 | 300,000 |
| 2018.05.31 | வங்கிக் கட்டணம் | 2,500 | | 297,500 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்க**:

(a) 2018 மே 31 இல் செம்மையாக்கம் செய்யப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) (03 புள்ளிகள்)

(b) 2018 மே 31 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 06

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி செயற்பாடுகளை ஆரம்பித்த **சரண நலன்புரிச் சங்கம்** தொடர்புபட்டதாகும்:

(1) ஒரு அங்கத்தவரின் வருடாந்த அங்கத்துவச் சந்தா ரூ. 3,000/-.

(2) 2017 ஏப்ரல் 01 இல் 5 அங்கத்தவர்களின் வருடாந்த அங்கத்துவச் சந்தா நிலுவையிலிருந்த அதேவேளை 3 அங்கத்தவர்களின் வருடாந்த அங்கத்துவச் சந்தா முன்கூட்டியே பெறப்பட்டிருந்தது.

(3) 2018 மார்ச் 31 இல் 8 அங்கத்தவர்களின் நடப்பு ஆண்டிற்கான அங்கத்துவச் சந்தா செலுத்தப்பட வில்லை. இதில் 3 அங்கத்தவர்கள் முந்திய ஆண்டிற்கான அங்கத்துவச் சந்தாவையும் செலுத்த வில்லை. 5 அங்கத்தவர்கள் அடுத்த ஆண்டிற்கான அங்கத்துவச் சந்தாவை முன்கூட்டியே செலுத்தியிருந்தனர்.

(4) 2018 மார்ச் 31 இல் சங்கத்தில் 153 அங்கத்தவர்கள் இருந்தனர்.

***நீங்கள் செய்யவேண்டியது :***

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அங்கத்தவர்களின் அங்கத்துவச் சந்தாக் கணக்கினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

**ஓல்ட் போய்ஸ் கிறிக்கெற் கழகமானது** அங்கத்தவர்களுக்கு விளையாட்டு வசதிகளை வழங்குகின்ற அதேவேளை, அங்கத்தவர்களுக்காக போசனசாலை ஒன்றை நடத்தியும் வெளிக்கள விளையாட்டு நிகழ்வுகளுக்கு வளாகத்தை வாடகைக்கு விட்டும் வருகின்ற ஓர் விளையாட்டுக் கழகமாகும்.

2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விளையாட்டுக் கழகத்தின் கொள்ளல், கொடுத்தல் கணக்கு கீழ்வருமாறு:

*(ரூ.'000)*

| **கொள்ளல், கொடுத்தல் கணக்கு** | | | |
|---|---|---|---|
| 2018 சனவரி 01 இல் மீதி | 18,500 | சம்பளம் | 2,900 |
| நன்கொடைகள் | 12,300 | விளையாட்டுத்திடல் பராமரிப்பு | 3,600 |
| வாடகை வருமானம் | 21,500 | போசனசாலை வழங்குநருக்கான கொடுப்பனவு | 24,200 |
| அங்கத்துவச் சந்தாப்பணம் | 8,400 | மின்சாரம், நீர் - போசணசாலை | 1,600 |
| போசனசாலை விற்பனை | 30,500 | போசனசாலையின் ஏனைய செலவுகள் | 2,500 |
| ஆயுள் அங்கத்துவச் சந்தா | 200 | விளம்பரம் | 2,500 |
| | | விளையாட்டு உபகரணக் கொள்வனவு – 2018 டிசெம்பர் 31 இல் | 18,000 |
| | | ஏனைய செலவுகள் | 4,100 |
| | | 2018 டிசெம்பர் 31 இல் மீதி | 32,000 |
| | **91,400** | | **91,400** |

சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு: *(ரூ.'000)*

| | 2018 சனவரி 01 இல் | 2018 டிசெம்பர் 31 இல் |
|---|---|---|
| ஆயுள் அங்கத்துவச் சந்தாப்பண நிதியம் | 2,200 | ? |
| போசனசாலை வழங்குநருக்குச் செலுத்தவேண்டியது | 3,200 | 3,800 |
| நிலுவையாகவுள்ள அங்கத்துவச் சந்தா | 800 | 500 |
| விளையாட்டு உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 45,000 | 54,000 |
| காணி, கட்டடங்கள் - முன்கொணரற் பெறுமதியில் | 30,000 | 29,000 |
| போசனசாலைத் தொக்குகள் - கிரயத்தில் | 4,500 | 3,200 |
| முன்செலுத்திய மின்சார, நீர்க் கட்டணங்கள் - போசனசாலை | 200 | 100 |

பின்வரும் மேலதிகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன:

- நன்கொடைகள் ஆண்டிற்கான வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.
- 2018 டிசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்களைத் தவிர ஆண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரண சேர்ப்பனவுகளோ அல்லது விற்பனைகளோ இருக்கவில்லை.
- ஆண்டின் இறுதியில் ஆயுள் அங்கத்துவ நிதியக் கணக்கின் 10 % ஆண்டிற்கான வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

**ஓல்ட் போய்ஸ் கிறிக்கெற் கழகத்தின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான போசனசாலை வியாபாரக் கணக்கு (03 புள்ளிகள்)

(b) 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவினக் கணக்கு (07 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

**சுவிமாலி பெஷன்ஸின்** உதவிக் கணக்காளர் 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரித்த வருமானக் கூற்றின்படி, ஆண்டிற்கான நிகர இலாபம் ரூ. 1,783,000/-.

(1) 2018 மார்ச் 31 இல் பேரேட்டுக் கணக்குகளில் காணப்பட்ட மீதிகள் கீழ்வருமாறு:

| | 2018 மார்ச் 31 இல் (ரூ.) |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் - கிரயத்தில் | 4,900,000 |
| அலுவலக உபகரணம் - கிரயத்தில் | 550,000 |
| திரள் தேய்மானம்: | |
| மோட்டார் வாகனம் | 2,450,000 |
| அலுவலக உபகரணம் | 137,500 |
| தொக்குகள் – கிரயத்தில் | 165,000 |
| வியாபார வருமதிகள் | 420,000 |
| முற்கொடுப்பனவுகள் | 11,500 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 125,000 |
| வியாபார சென்மதிகள் | 720,000 |
| அட்டுறு செலவுகள் | 65,000 |
| 2017 ஏப்ரல் 01 இல் மூலதனம் | 1,190,000 |
| உரிமையாளர் எடுப்பனவுகள் | 174,000 |

உங்களுக்கப் பின்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(2) 2018 மார்ச் 31 இல் இறுதித் தொக்குகளின் கிரயப் பெறுமதி வருமானக் கூற்றினைத் தயாரித்தலில் கணக்கிற் கொள்ளப்பட்டது. எனினும், இந்தத் தொக்குகளின் நிகரத் தேறுகைப் பெறுமதி ரூ.150,000/- ஆகும்.

(3) 2016 ஏப்ரல் 01 இல் ரூ. 2,000,000/- க்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்று 2018 மார்ச் 31 இல் ரூ. 1,300,000/- க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்தத் தொகைக்கு 2018 ஏப்ரல் 10 ஆந் திகதியிடப்பட்ட காசோலை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது தொடர்பில் கணக்கேடுகளில் எதுவித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. வாகனங்கள் ஆண்டிற்கு 25 % இல் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் தேய்மானம் செய்யப்படும்.

***நீங்கள் செய்யவேண்டியது:***

2018 மார்ச் 31 இல் **சுவிமாலி பெஷன்ஸின்** நிதிநிலைக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 09

***ரஷ்மி, புஷ்மி*** மற்றும் ***குஷ்மி*** ஆகியோர் ***மிமிஸ் கலக்ஷன்ஸ்*** எனும் பெயரின் கீழ் பங்குடமை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(1) பங்குடமை உடன்படிக்கை கீழ்வரும் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது:

- பங்காளர்கள் அவர்களின் ஆரம்ப மூலதனக் கணக்கு மீதிகள் மீது ஆண்டிற்கு 6 % மூலதன வட்டி பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.
- ***புஷ்மியும் குஷ்மியும்*** வியாபாரத்தை முகாமை செய்வது தொடர்பில் ஒவ்வொருவரும் மாதாந்தம் ரூ. 35,000/- சம்பளம் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.
- இலாப, நட்டங்கள் ***ரஷ்மி, புஷ்மி, குஷ்மி*** ஆகியோருக்கிடையில் முறையே 3 : 1 : 1 விகிதத்தில் பகிரப்படும்.

(2) கீழே தரப்பட்டுள்ள மீதிகள் ***மிமிஸ் கலக்ஷன்ஸ்*** இன் 2018 மார்ச் 31 இன்படியான பரீட்சை மீதியிலிருந்து பிரித்தறியப்பட்டன:

| | **வரவு (ரூ.‘000)** | **செலவு (ரூ.’000)** |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்குகள் : | | |
| ***ரஷ்மி*** | | 1,500 |
| ***புஷ்மி*** | | 500 |
| ***குஷ்மி*** | | 500 |
| 2017 ஏப்ரல் 01 இல் நடைமுறைக் கணக்குகள் : | | |
| ***ரஷ்மி*** | 65 | |
| ***புஷ்மி*** | | 5 |
| ***குஷ்மி*** | 50 | |

(3) கீழ்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

- 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பகிர்வுக்கு முந்திய வியாபாரத்தின் நிகர இலாபம் ரூ. 1,490,000/-.
- வியாபாரத்தை முகாமை செய்வதில் பங்காளர்களின் ஈடுபாட்டிற்கு அமைய 2018 மார்ச் 31 இல் இலாபப் பகிர்வு விகிதத்தினை முறையே ***ரஷ்மி, புஷ்மி*** மற்றும் ***குஷ்மி***க்கிடையில் 2 : 1 : 1 ஆக மாற்றுவதற்கு பங்காளர்கள் தீர்மானித்தனர்.

- அதே தினத்தில் பங்குடமையின் நன்மதிப்பினை ரூ. 1,000,000/- ஆக மதிப்பிட்டதுடன் நன்மதிப்புக் கணக்கினைத் திறக்காது, வேண்டிய செம்மையாக்கங்களை பங்காளர்களின் மூலதனக் கணக்குகளின் ஊடாக மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

மேற்படி ஊடுசெயல்களைப் பதிவுசெய்வதற்கு 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **மிமிஸ் கலக்ஷன்ஸ்** இன் கீழ்வரும் கணக்குகளைத் **தயாரிக்குக**:

(a) பங்காளர் நடைமுறைக் கணக்குகள் (06 புள்ளிகள்)

(b) பங்காளர் மூலதனக் கணக்குகள் (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

## <u>பகுதி D</u>

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

### வினா 10

***வ/ப பாஷா (தனி) கம்பனியின்*** 2018 மார்ச் 31 இலான பரீட்சை மீதி கீழ்வருமாறு:

*(ரூ.'000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் – 500,000 சாதாரண பங்குகள் | | 5,000 |
| 2017 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 7,325 |
| பொது ஒதுக்கம் | | 850 |
| பங்குகளின் விண்ணப்பங்கள் தொடர்பில் பெற்ற பணம் | | 2,400 |
| மோட்டார் வாகனங்கள் - கிரயத்தில் | 32,500 | |
| அலுவலக உபகரணம் - கிரயத்தில் | 2,000 | |
| 2017 ஏப்ரல் 01 இலான திரள் தேய்மானம் : | | |
| மோட்டார் வாகனங்கள் | | 22,500 |
| அலுவலக உபகரணம் | | 1,600 |
| தொக்குகள் - 2018 மார்ச் 31 இல் | 6,615 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 8,220 | 1,350 |
| 2017 ஏப்ரல் 01 இல் ஐயுறவுக்கடன் ஏற்பாடு | | 57 |
| கையிலும் வங்கியிலுமுள்ள காசு | 3,190 | |
| 12 % தனிச்சங்கள் | | 5,000 |
| செலுத்திய பங்கிலாபம் – இடைக்கால மற்றும் இறுதி | 375 | |
| விற்பனை | | 47,125 |
| விற்பனைக் கிரயம் | 23,500 | |
| நிருவாகச் செலவுகள் | 3,050 | |
| விநியோகச் செலவுகள் | 2,047 | |
| செலுத்தப்பட்ட தனிச்ச வட்டி | 300 | |
| ஏனைய நிதிச் செலவுகள் | 210 | |
| 6 மாத நிலையான வைப்பு (2018 மார்ச் 31 இல் முதலிடப்பட்ட) | 11,000 | |
| ஆண்டிற்கான வருமான வரி (முற்றாகத் தீர்க்கப்பட்டது) | 200 | |
| **மொத்தம்** | **93,207** | **93,207** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன:

(1) கம்பனிக்கு வழங்கும் நிதி வசதிகளை அதிகரிப்பதற்காக குறிப்பிடு மூலதனத்தை அதிகரிக்குமாறு வங்கி கம்பனியைக் கேட்டுக்கொண்டது. அதன்படி, கம்பனி 2018 சனவரி 31 இல் 200,000 புதிய பங்குகளை பங்கொன்று ரூ. 10/- வீதம் வழங்கியது. 2018 மார்ச் 01 ஆந் திகதி மேலதிகமாகப் பெற்ற விண்ணப்பப் பணத்தை திருப்பிச் செலுத்தி, பங்குகளை ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டது. எனினும், பெற்றுக்கொண்ட பங்கு விண்ணப்பப் பணத்தினைப் பதிவுசெய்தமை தவிர இது தொடர்பில் வேறெந்தப் பதிவுகளும் கணக்கேடுகளில் மேற்கொள்ளப்படவில்லை.

(2) கம்பனி 2017 ஏப்ரல் 01 இல் ஒவ்வொன்றும் ரூ. 100/- க்கு 50,000 எண்ணிக்கையான 12 % தனிச்சங்களை வழங்கியது. இதன் மீதான வட்டி ஒவ்வொரு ஆண்டிலும் ஆண்டிற்கு இரு தடவை அக்டோபர் 01 மற்றும் ஏப்ரல் 01 ஆகிய திகதிகளில் செலுத்தப்படும்.

(3) விரிவாக்கத் திட்டமொன்றின் கீழ், உற்பத்திச் செயன்முறையை நோக்கி நகர்வதற்கு சபை தீர்மானித்தது. அதன் அடிப்படையில் கம்பனி 2018 பெப்ரவரி 15 இல் ரூ. 50,000,000/- கிரயமான புதிய எந்திரமொன்றினை கடன் அடிப்படையில் கொள்வனவு செய்து உற்பத்தியினை 2018 மார்ச் 01 இல் ஆரம்பித்தது. எந்திரக் கிரயமும் எந்திர நிறுவுதற் கிரயம் ரூ. 2,800,000/- உம் 2018 ஏப்ரல் 15 இல் செலுத்தி முடிக்கப்பட வேண்டும். எனினும், இவை தொடர்பில் கணக்கேடுகளில் எதுவித பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.

(4) பொறி மற்றும் உபகரணம் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் தேய்மானம் செய்யப்படும். சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | : | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | : | 10 ஆண்டுகள் |
| எந்திரம் | : | 10 ஆண்டுகள் |

(5) கணக்கேடுகளில் 2018 மார்ச் 31 ஆந் திகதியில் கீழ்வரும் அட்டுறுக்களும் முற்கொடுப்பனவுகளும் பதிவுசெய்யப்பட வேண்டும்:

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டிய வாடகை | : | ரூ. 45,000/- |
| காப்புறுதி முற்கொடுப்பனவு | : | ரூ. 8,000/- |

(6) 2018 மார்ச் 31 இல் வியாபார வருமதிகளுக்கான ஐயுறவுக் கடன் ஏற்பாடு ரூ. 123,000/- ஆக அதிகரிக்கப்பட வேண்டும்.

(7) கம்பனியின் பணிப்பாளர் சபை நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்கு 2018 யூன் 15 இல் அங்கீகரித்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

**வ/ப பாஷா (தனி) கம்பனியின்** முகாமைத் தேவைகளுக்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (11 புள்ளிகள்)

(b) 2018 மார்ச் 31 ஆந் திகதியிலான நிதிநிலைக்கூற்று (14 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |